Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 12 (28 11 1991) வியாழக்கிழமை ஓசை: 283

## திட்டமிட்டபடி பரீட்சை; ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண பரீட்சைகள் திட்டமிட்டபடி நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ் கல்வித் திணைக்களம் பூர்த்தி யாக்கியுள்ளது. பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டிருக்கின்றன. பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பாடசாலைகள் மூலமும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலமும் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இடம் பெயர்ந்த பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அந்தந்தக் கல்விக் கோட்டங்களில் சனி, திங்கள் ஆகிய தினங்களில் வழங் [4 ஆம் பக்கம் பார்க்க]

# தமிழீழ தேசிய நாள்

# படைப் பிரிவுகள் அணிவகுப்பு

## எழுச்சி விழாவில் பல்லாயிரம் மக்கள் பிரதித் தலைவர் அணிவகுப்பை ஏற்றார்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தின் இறுதி நாளும் தேசிய நாளுமான நேற்று குடாநாடு எங்கும் எழுச்சியூட்டும் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இவ் எழுச்சி நாளின் சிறப்பு நிகழ்ச்சியாக விடுதலைப் புலிகளின் படைஅணிகளும், காவல்துறையினரும் இணைந்து நடத்திய அணிநடையும், அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது, இவ அணிவகுப்பு மரியாதையை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர் கோ. மகேந்திரராசா ஏற்றார். இந் நிகழ்ச்சியினை பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்ணுற்றனர்.

திருநெல்வேலி சந்தியிலிருந்து யாழ். பல்கலைக்கழக மைதானம்வரை இடம்பெற்ற நீண்ட தூர அணிவகுப்பு நிகழ்வு, மக்களிடையே புதுவிதமான எழுச்சி உணர்வை தூண்டியது.

இந்த அணிவகுப்பு நிகழ்வில் ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றினர். விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவு சிறப்பு அதிரடிப் படையும், படைத்துறை மாணவர்களும் இந்த அணிவகுப்பில் பங்குபற்றியது மக்களின் கவனத்தை கவர்ந்தது.

பாண்ட் வாத்திய இசையுடன் விடுதலைப் புலிகள் ஆண், பெண் போராளிகள், தமிழீழ காவல்துறையின் ஆண், பெண் உறுப்பினர்கள் ஆகியோர் தனித் தனி பிரிவின ராக அணிவகுப்பில் பங்குபற்றினர்.

பதினான்கு வயதுக்குக் குறைந்த வயதுடைய சிறுவர் சிறுமியர், படைத்துறைப் பள்ளி- (4 ஆம் பக்கம் பார்க்க)

## எமது வெற்றி நிச்சயம்; மனங்களில் உறுதியுள்ளது

—மகேந்திரராசா

(யாழ்ப்பாணம்)

நாம் என்றும் தோற்றவர்கள் அல்ல; தோற்கப் போவதும் அல்ல, எமது மனங்களில் உறுதியுள்ளது. நாம் நிச்சயம் வெல்வோம். யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் ... ராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இங்கு தொடர்ந்து பேசும்போது, ஒருவன் தன் வாழ்க்கையை ஒரு இலட்சியத்திற்காக அர்ப்பணிக்கும் போது, அவன் அந்த இலட்... கள் மிக உறுதி பெற்றனர்கள். இவர்கள் எமதுஇனத்திற்கு புதிய வரலாறு படைக்கப் புறப்பட்டவர்கள்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்தி...



## வீரவணக்கம்

### கணேஸ்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுப் பகுதியில் 21-7-91 அன்று காயமடைந்து மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த கணேஸ் (சாம்பசிவம் தயானந்தன், இரண்டாம் குறிச்சி மண்டூர், மட்டக்களப்பு) என்ற போராளி நேற்று வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### சிவாவிற்கு மக்கள் அஞ்சலி

நடமாடும் பிரதேச அலுவலகத்தில் தலைவராக ஏற்பட்ட வெடி விபத்தில் வீரமரணமடைந்த வீரவேங்கை சிவாவின் புகழுடல் நேற்று (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சுவார்த்தை பயன் ஏதும் ஏற்படாது

### டி.பி.விஜயதுங்கா

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எந்தப் பயனும் இல்லை. அவர்கள் துப்பாக்கியில் மட்டும் நம்பிக்கை வைத்து ஜனநாயக வழிக்கு வர மறுக்கும் வரை நூறாண்டு காலம் அவர்களுடன் பேச்சு நடத்தினாலும் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. இவ்வாறு பிரதமரும் நிதிய அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா நேற்றுப் பாராளுமன்றத்தில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வழக்கறிஞர் வீரசேகரன் புலிகளின் வழக்கறிஞராம்

(சென்னை)

சென்னை நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை கைதான வழக்கறிஞர் வீரசேகரன் சென்னை நீதிமன்றங்களில் விடுதலைப் புலிகளுக்காக ஆஜராகி வந்தார் என்று தமிழக பொலிசார் ராஜீவ் காந்தி வழக்கு விசாரணை நடாத்தும் நீதிபதி ஒருவரிடம் தெரிவித்துள்ளனர்.

ராஜீவ் படுகொலை தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டு வந்த சாந்தனை தப்புமாறு வீரசேகரன் கடிதம் மூலம் கோரியிருந்தார் என்றும், இட்டு இந்தியாவிலிருந்த (4 ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் இறேசி; ஞாபகார்த்த மண்டபம்

லெப். கேணல் இறேசி ஞாபகார்த்த மண்டபத்தை நேற்று காலை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவரும், தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதித் தலைவருமான கோ. மகேந்திரராசா சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார். (4 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் பல்கலைக்கழகங்கள் மீண்டும் மூடப்படலாம்?

பல்கலைக்கழக கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுவது தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடிகளால் தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்கள் மூடப்படக் கூடிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று மேற்கோள் காட்டி பி.பி.சி நேற்றிரவு கூறியது. அச்செய்தியில் மேலும் கூறிய பி.பி.சியின் கொழும் (4 ஆம் பக்கம் பார்க்க

## தனிமாவட்டமாக தீவகம்; அரசாங்கம் முயற்சி?

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் தீவகப் பகுதிகளைத் தனியொரு மாவட்டமாக மாற்றுவதற்கு சிறிலங்கா அரசு முயற்சிக்கின்றது சிறிலங்கா அரசின் புனர்... பில் தீவிரமாக இறங்கியுள்ளன. ...ப்படுத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல்...

# எழுச்சி விழாவில் பல்லாயிரம் மக்கள் பிரதித் தலைவர் அணிவகுப்பை ஏற்றார்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தின் இறுதி நாளும் தேசிய நாளுமான நேற்று குடாநாடு எங்கும் எழுச்சியூட்டும் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இவ் எழுச்சி நாளின் சிறப்பு நிகழ்ச்சியாக விடுதலைப் புலிகளின் படைஅணிகளும், காவல்துறையினரும் இணைந்து நடத்திய அணி நடையும், அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது. இவ அணிவகுப்பு மரியாதையை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர் கோ. மகேந்திரராசா ஏற்றார். இந் நிகழ்ச்சியினை பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்ணுற்றனர்.

திருநெல்வேலி சந்தியிலிருந்து யாழ். பல்கலைக்கழக மைதானம்வரை இடம்பெற்ற நீண்ட தூர அணிவகுப்பு நிகழ்வு, மக்களிடையே புதுவிதமான எழுச்சி உணர்வை தூண்டியது.

இந்த அணிவகுப்பு நிகழ்வில் ஆயிரமினர் ஈடுபட்டனர்.

விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவு சிறப்பு அதிரடிப் படையும், படைத்துறை மாணவர்களும் இந்த அணிவகுப்பில் ஈடுபட்டது மக்களின் கவனத்தை கவர்ந்தது.

பான்ட் வாத்திய இசையுடன் விடுதலைப் புலிகள் ஆண், பெண் போராளிகள், தமிழீழ காவல்துறையின் ஆண், பெண் உறுப்பினர்கள் ஆகியோர் தனித்தனி பிரிவினராக அணிவகுப்பில் ஈடுபட்டனர்.

பதினான்கு வயதுக்குக்குறைந்த வயதுடைய சிறுவர் சிறுமியர், படைத்துறைப் பள்ளி-

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### கணேஸ்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுப் பகுதியில் 21-7-91 அன்று காயமடைந்து மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த கணேஸ் (சுப்பு சிவம் தயானந்தன், இரண்டாம் குறிச்சி மண்டூர், மட்டக்களப்பு) என்ற போராளி நேற்று வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### சிவாவிற்கு மக்கள் அஞ்சலி

நடமாடும் பிரதேச அலுவலகத்தில் கடமையாற்றி ஏற்பட்ட வெடி விபத்தில் வீரமரணமடைந்த வீரவேங்கை சிவாவின் புகழுடல் நேற்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வழக்கறிஞர்...

(சென்னை)

சென்னை நீதிமன்றத்தில் நடந்த திங்கட்கிழமை கைதான வழக்கறிஞர் வீரசேகரன் சென்னை நீதிமன்றங்களில் விடுதலைப் புலிகளுக்காக ஆஜராகி வந்தார் என்று தமிழக பொலிசார் ராஜீவ் காந்தி வழக்கு விசாரணை நடாத்தும் நீதிபதி சித்தகம் தெரிவித்துள்ளனர்.

ராஜீவ் படுகொலை தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டு வந்த சாந்தனை தப்புமாறு வீரசேகரன் கடிதம் மூலம் கோரியிருந்தார் என்றும், விட்டு இந்தியாவிலிருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## லெப். கேணல் கிறேசி; ஞாபகார்த்த மண்டபம்

லெப். கேணல் கிறேசி ஞாபகார்த்த மண்டபத்தை நேற்று காலை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவரும், தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதித் தலைவருமான கோ. மகேந்திரராசா சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் பல்கலைகழகங்கள் மீண்டும் மூடப்படலாம்?

பல்கலைக்கழக கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுவது தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடிகளால் தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்கள் மூடப்படக் கூடிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக கொழும்புச் செய்தியொன்று மேற்கோள் காட்டி பி.பி.சி நேற்றிரவு கூறியது.

அச்செய்தியில் மேலும் கூறிய பி.பி.சியின் கொழும்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# எமது வெற்றி நிச்சயம்; மனங்களில் உறுதியுள்ளது

—மகேந்திரராசா

(யாழ்ப்பாணம்)

நாம் என்றும் தோற்றவர்கள் அல்ல; தோற்கப் போவதும் அல்ல, எமது மனங்களில் உறுதியுள்ளது. நாம் நிச்சயம் வெல்வோம்.

யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற மாவீரர் தேசிய விழாவில் கலந்து கொண்டு பேசும் போது, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு கோ. மகேந்திரராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது, ஒருவன் தன் வாழ்க்கையை ஒரு இலட்சியத்திற்காக அர்ப்பணிக்கும் போது, அவன் அந்த இலட்சியத்திற்காகவே வாழுகிறான் அதற்காகவே போராடுகிறான்.

மாவீரர்கள் சராசரி மனிதனிடமிருந்து உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் மிக உறுதி பெற்றவர்கள். இவர்கள் எமது இனத்திற்கு புதிய வரலாறு படைக்கப் புறப்பட்டவர்கள்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், எமது மக்களுக்கும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர்நாள் நிகழ்ச்சிகள் நேற்று முடிவுற்றன

தமிழீழத் தேசியக்கொடி நேற்றும் மாலை ஐந்து மணி ஐந்து நிமிடங்களுக்கு இறக்கப்பட்டதைத் தொடர்ந்து மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் முடிவு பெற்றன.

தமிழீழ மாவீரர் வாரத்தை முன்னிட்டு கடந்த இருபத்தோராம் திகதி காலை எட்டு மணிக்கு தமிழீழமெங்கும் உள்ள அனைத்து முக்கிய இடங்களிலும் தமிழீழ தேசிய கொடியான புலிக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது தெரிந்ததே.

கடந்த ஒருவாரமாக மிகவும் புனிதத் தன்மையுடன் இத் தேசியக்கொடி தமிழ் மக்களால் தினமும் பாதுகாக்கப்பட்டு புனிதப்படுத்தப்பட்டு வணங்கப்பட்டு வந்தது என்றுமில்லாதவாறு தமிழீழ மக்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில்

## பரீட்சை முடிவுகள் யாழ். வந்து சேர்ந்தன

ஆண்டு ஐந்து மாணவர்களுக்குரிய புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் வெளிவந்து விட்டது. கொழும்பில் இருந்து திரும்பிய கல்விப் பணிப்பாளர் திரு இராசரத்தினம் இப்பெறுபேறுகளை எடுத்து வந்திருக்கிறார். இவை இன்று கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கூடாக அனைத்து பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்படவிருக்கின்றது. (ச)

### க. பொ. த. உ. த. பரீட்சை

## செய்முறை பரீட்சைகள் யாழ். நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரத்திற்கான செய்முறைப் பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

நடனம், மனையியல், சங்கீதம் ஆகிய பாடங்களிற்கான செய்முறைப்பரீட்சைகள் இதுவரை காலமும் கொழும்பிலேயே நடாத்தப்பட்டு வந்தது.

யாழ்ப்பாணத்தில் இப் பரீட்சைகளை நடாத்துவதற்கு வசதியாக பரீட்சகர்களுக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இந். படை வெளியேற்றம்; ஜனாதிபதி ஆட்சியே காரணம்

- ஹமீத்

(கொழும்பு)

இந்திய இராணுவம் இலங்கையில் இருந்து விலகுவதற்கு இங்கு நிலவிய ஜனாதிபதி ஆட்சிமுறையே காரணம் என்று சிறிலங்கா உயர் கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆட்சிமுறை இந்த நாட்டில் கடைப்பிடிக்காமல் விட்டிருந்தால் பயங்கரவாதத்தை இவ்வளவு தூரம் நாம் அடக்கி இருக்க முடியாது என்றும், இந்திய இராணுவத்தை நாட்டிலிருந்து வெளியேற்றியிருக்கவும் முடியாது என்றும், ஜனநாயகம் நாட்டில் காப்பாற்றப்பட்டிருப்பது ஜனாதிபதி முறையினால் தான் என்பதை எல்லா எதிர்க்கட்சிகளும் உணர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# தனிமாவட்டமாக தீவகம்; அரசாங்கம் முயற்சி?

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் தீவகப் பகுதிகளைத் தனியொரு மாவட்டமாக மாற்றுவதற்கு சிறிலங்கா அரசு முயற்சிக்கின்றது சிறிலங்கா அரசின் புனர்வாழ்வு அமைச்சும், கூட்டுப்படைகளின் தலைமையலுவலகமும் இணைந்து இம்முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளன.

இதற்காக இப்பகுதிகளை ஒன்றிணைத்து புதிய நிர்வாக மாவட்டம் ஒன்றைப் பிரகடனப்படுத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிதாக அமைக்கப்படவிருக்கும் இம் மாவட்டத்திற்குத் தேவையான அனைத்து நிர்வாக வசதிகளையும் ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பதிவு செய்த வாகனங்கள் செல்லமட்டுமே அனுமதி

மார்கழி மாதம் முதலாம் திகதி முதல் பதிவு செய்த வாகனங்கள் மட்டுமே வடக்கிற்கு வெளியே செல்ல அனுமதிக்கப்படும் என போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறிவித்துள்ளது.

வடபகுதிக்கு வெளியே செல்லும் வாகனங்களுக்கான பதிவுகள் வவுனியா தடை முகாமில் வைத்து தற்போது மேற்கொள்ளப்படுகிறது வடக்கிற்கு வெளியே செல்லும் வாகன உரிமையாளர்கள் தமது வாகனங்களைப் பதிவு

[4 ஆம் பக்கம் பார்க்க)

இலவசஇணைப்பு 1982 தொடக்கம் மண்மீட்புக்காய்உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

# அம்பாறையில் சுற்றிவளைப்பு; 200 தமிழர் இராணுவத்தால் கைது

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள பக்மேறு கிராமங்களைச் சுற்றி வளைத்த விசேட அதிரடிப்படையினர் சுமார் இருநூறு ஆண்களைக் கைதுசெய்துள்ளனர். அவர்களில் சுமார் அறுபதுபேர் முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கூட்டுப்படைத்தலைமையகம் அறிவித்துள்ளது

இதேவேளை மட்டக்களப்புக்கு சமீபமாக நேற்றுமுன்தினம்ரயில் பாதையோரத்தில் ஊர்காவல் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் மற்றுமொருவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிய வருகிறது

மேலும் திருக்கோணமலை மாவட்டத்தில் ரோந்து சென்ற படையினர் மீது நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் காயமடைந்த படையினர் கடற் படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

யாழ். பல்கலைக் கழகத்தில் மலர்ந்த

# மாவீரர்கள்!



**லெப். கேணல் சந்தோசம்**
[கணபதிப்பிள்ளை உமைநேசன்]
(விஞ்ஞானபீட மாணவன்)
அரியாலை, யாழ்ப்பாணம்.
தாயின் மடியில்: 04-01-1959 தாயக விடிவில்: 21-10-1987



**வீரவேங்கை நளின்**
[சச்சிதானந்தன் பிரதாபன்]
(மருத்துவ பீட மாணவன்)
வட்டுக்கோட்டை.
தாயின் மடியில்: 04-12-1963 தாயக விடிவில்: 26-04-1986



**கப்டன் அலெக்ஸ்**
(கந்தசாமி நித்தியானந்தன்)
(விஞ்ஞான பீட மாணவன்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
தாயின் மடியில்: 31-03-1958 தாயக விடிவில்: 26-04-1986

பல்கலைக்காய் வளாகத்தில்
உங்கள் பாதம் பதித்தீர்கள்
தேம்பியழும் தேச அன்னையின்
துயர் கண்டு துடித்தீர்கள்
போர்க்கலையில் எங்கள்
புலிப்படையின் தடம்பார்த்து
புதுப்பயணம் தொடர்ந்தீர்கள்!
எதிரிக்கு மட்டுமல்ல,
எம் புத்தகப் பூச்சிகளுக்கும்
புதுப்பாடம் புகட்டிவிட்டீர்கள்!
இதோ...... உங்கள்
கனக்கும் கருவிகளும், கனவுகளும்
எங்கள் அணைப்புக்குள்......
இனியும்
கதிரவனுக்காக காத்திருக்க மாட்டோம்!

மறுமலர்ச்சிக் கழகம்,
யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
22-11 1991



**லெப்டினன் சுதர்சன்**
[பூபாலப்பிள்ளை சிவகுருநாதன்]
(மருத்துவ பீட மாணவன்)
ஆரையம்பதி - 1, மட்டக்களப்பு
தாயின் மடியில்: 18-05-1964 தாயக விடிவில்: 28-06-1987



**லெப்டினன் நித்திலா**
(நல்லையா பவானி)
(விஞ்ஞான பீட மாணவி)
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.
தாயின் மடியில்: 06-02-1966 தாயக விடிவில்: 26-06-1989

## வரி விளம்பரம்

### இடமாற்றம்

நீவகத்திக் ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவில் சேவையாற்றிய மாசிகியம் குழந்தைகள் வைத்தியசாலை தற்காலிகமாக கல்வியங்காட்டிலிருந்து 1 மைல் தொலைவில் உள்ள இருபாலைச்சந்தி குமரபுரம் இல்லத்திற்கு மாற்றப்படும் என்று. நிர்வாகம். [R/1942]

### பழைய புத்தகங்கள்


தங்களிடமுள்ள புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும். யாழ் பழைய புத்தகக் கடை, 32, அருச்சுனா (கிரசன்லி) வீதி. (R/1954)

### விற்பனைக்கு

நல்ல இன அல்சேசன் பெண் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பூச்சி அகற்றப்பட்டவை. வயது 60 நாட்கள். வரதன் டைசக்கிள் கடை அரசடி, நவாலி. [R/1955

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 11 - 28**



**வதனன்**

**கரன்**



1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திரியாயில் எமது முகாம் ஒன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவு எய்திய

**கப்டன் கருணா** (முத்துக்குமாரு புகராஜா சாம்பல்தீவு திருக்கோணமலை)

**ஜெனராஜ் | ஜனகராஜ்** (சபாரத்தினம் செல்லை சோதி அல்லாய் வடக்கு)



லெப். கேணல் சந்தோசம்
[கணபதிப்பிள்ளை உமைநேசன்]
(விஞ்ஞானபீட மாணவன்)
அரியாலை, யாழ்ப்பாணம்.
தாயின் மடியில்: 04-01-1959
தாயக விடிவில்: 21-10-1987



லெப்டினன் சுதர்சன்
[பூமாலப்பிள்ளை சிவகுருநாதன்]
(மருத்துவபீட மாணவன்)
ஆரையம்பதி - 1, மட்டக்களப்பு
தாயின் மடியில்: 18-05-1964
தாயக விடிவில்: 28-06-1987



லெப். காண்டீபன் [எம்.பி]
[சுப்பிரமணியம் ஸ்ரீஸ்கந்தராசா]
(விஞ்ஞான பீட மாணவன்)
குஞ்சுப்பரந்தன், முல்லைத்தீவு.
தாயின் மடியில்: 10-06-1957
தாயக விடிவில்: 24-12-1984

22 11 1991

(B/3531)

வீரவேங்கை நளின்
[சச்சிதானந்தன் பிரதாபன்]
(மருத்துவ பீட மாணவன்)
வட்டுக்கோட்டை
தாயின் மடியில்: 04-12-1963
தாயக விடிவில்: 26-04-1986

பல்கலைக்காய் வளாகத்தில்
உங்கள் பாதம் பதித்தீர்கள்
தேம்பியழும் தேச அன்னையின்
துயர் கண்டு துடித்தீர்கள்
போர்க்கலையில் எங்கள்
புலிப்படையில் நடைபார்த்து
புதுப்பயணம் தொடர்ந்தீர்கள்!
எதிரிக்கு மட்டுமல்ல,
எம் புத்தகப் பூச்சிகளுக்கும்
புதுப்பாடம் புகட்டிவிட்டீர்கள்!
இதோ...... உங்கள்
கனக்கும் கருவிகளும், கனவுகளும்
எங்கள் அணைப்புக்குள்......
இனியும்
கதிரவனுக்காக காத்திருக்க மாட்டோம்!

மறுமலர்ச்சிக் கழகம்,
யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
22-11 1991



கப்டன் நளன்
[கணபதிப்பிள்ளை குலேந்திரராசா]
(விஞ்ஞான பீட மாணவன்)
ஐயனார் கலட்டி, பருத்தித்துறை.
தாயின் மடியில்: 19-06-1955
தாயக விடிவில்: 05-10-1987



கப்டன் அலெக்ஸ்
[கந்தசாமி நித்தியானந்தன்]
(விஞ்ஞான பீட மாணவன்)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
தாயின் மடியில்: 31-03-1958
தாயக விடிவில்: 26-04-1986



லெப்டினன் நித்திலா
(நல்லையா பவானி)
(விஞ்ஞான பீட மாணவி)
அம்பர் மனை, வல்வெட்டித்துறை.
தாயின் மடியில்: 06-02-1966
தாயக விடிவில்: 26-06-1989



வீரவேங்கை புவி
[பொட்ஸ்]
(சேதுநாயகம் ரவீந்திரராசா)
(விஞ்ஞான பீட மாணவன்)
புலோலி, பருத்தித்துறை
தாயின் மடியில்: 03-08-1965
தாயக விடிவில்: 16-04-1984

மறுமலர்ச்சிக் கழகம்,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி



வதனன்



கரன்

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திரியாயில் எமது முகாம் ஒன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவு எய்திய

கப்டன் கருணா (முத்துக்குமாரு யுகராஜா சாம்பல்தீவு திருக்கோணமலை)

ஜெனராஜ் | ஜனகராஜ் (சபாரத்தினம் செல்வ சோதி அல்வாய் வடக்கு)

கரன் (தர்மலிங்கம் பிரபாகரன் - செந்தூர் இல்லம். சுபாஷ்சந்திரபோஸ் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு)

1987 ஆம் ஆண்டு மட்டுவிலில் இந்திய படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு எய்திய

லெப். வின்சன் (மகேந்திரன் மதிசூதன் சரசாலை வடக்கு, சாவகச்சேரி)

1988 ஆம் ஆண்டு கோவை குஞ்சுக்குடியில் இந்தியப் படையினர் மற்றும் தேசத்துரோகிகளால் கைது செய்யப் பட்டபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு எய்திய

தென் தமிழீழத்தில் வீரச்சாவு எய்திய முதல் பெண் போராளி

லெப். அனித்தா (சித்திராதேவி தம்பிராசா ஆரையம்பதி, மட்டக்களப்பு

1990 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் சிறிலங்கா படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச் சாவு எய்திய

வதனன் (கார்த்திகேசு காவேந்திரன் முருக மூர்த்தி கோயிலடி, காரைநகர்)

சிறி (முத்தையா கஜேந்திரராசா - புளியங்கூடல் சுருவில்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(B/3532)

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

### சிந்தனைக்கு

சமாதானத்தை நாம் நேசிக்கின்றோம்: ஆனால் ஈட்டி துப்பாக்கிகளை விட, அடிமை விலங்குகள் மிகப் பயங்கரமானவை.

— டக்லஸ் ஜெர்ரோல்ட்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 28-11-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

## போரா? சமாதானமா? தீர்வு அரசு பக்கம்

'நாம் எமது வரலாற்றுத் தாயகத்தில் ஒரு தேசிய மக்கள் இனம் என்ற அந்தஸ்துடன் நிம்மதியாக, அமைதியாக வாழ விரும்புகின்றோம். எம்மை நிம்மதியாக வாழ விடுங்கள் என்பதுதான் எமது மக்களுடைய எளிமையான அரசியல் ஆசை.'

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் செய்தியில் தெளிவாகவும் அதேவேளை சுருக்கமாகவும் வெளியிட்டுள்ளார். இந்த தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை சிறிலங்கா சிங்கள அரசு எப்பொழுது அங்கீகரிக்கின்றதோ அப்பொழுதே ஒரு நிரந்தர சமாதானமும், தீர்வும் ஏற்பட முடியும் எனவும் தெரிவித்துள்ளார்

அதேவேளை நாம் போருக்கும் தயார், சமாதானத்திற்கும் தயார் சமாதானத்திற்கான வழியைத் திறப்பதா அல்லது யுத்தத்தின் பாதையில் செல்வதா என்பதை எதிரிதான் தீர்மானிக்க வேண்டும் நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்துவிட்டிருக்கின்றோம். சமாதான வழிமுறையில் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தவும் தயார் எனவும் தெரிவித்துள்ளார்.

இன்று இலங்கையில் மட்டுமல்ல; உலகின்; எல்லாப் பாகங்களிலும் அடக்கப்பட்ட தேசிய இனங்களின் போராட்டங்களே முதன்மையானவையாக நெருக்கடி மிக்கவையாக உள்ளன இந்த தேசிய இனங்களின் போராட்டங்களில் சில வெற்றி பெற்றுள்ளன. சில வெற்றி பெறும் தறுவாயில் உள்ளன. சில போராட்டங்களுக்கு சமாதான முயற்சிகளின் மூலம் தீர்வு காண்பதற்கு சர்வதேச சமூகம் முனைந்து கொண்டிருக்கின்றது. இப்பிரச்சினைகளில் அநேகமானவை ஆசியாவிலும், ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் பரந்து கிடக்கின்றன.

இப் போராட்டங்களில் வெற்றி கண்டவையாயினும் - லித்வேனியா, லட்வியா, எஸ்தோனியா, எரித்திரியா - சரி, தற்பொழுது வெற்றிபெறும் நிலையில் உள்ள அல்லது பிரிந்து செல்லும் உரிமையுடையவையான சோவியத் குடியரசுகளாயினும் சரி, சர்வதேச சமூகம் இன்று சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ள இஸ்ரேல் அரபு நெருக்கடி, யூக்கோஸ்லாவிய சேபியர் - குரோசியர் நெருக்கடி ஆயினும் சரி, இன்று இப் பிரச்சினையில் தொடர்புடைய சகலரினதும் தேசிய இன அந்தஸ்தை அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு அவர்களின் சுயநிர்ணய உரிமைகளையும் அங்கீகரித்தே பிரச்சினைகளுக்குரிய தீர்வு திட்டங்கள் முன்வைக்கப்படுகின்றன அவற்றின் அடிப்படையிலேயே பேசவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

மேற்கூறிய இந்த நெருக்கடிகள் யாவற்றிலும் பெரும்பான்மை இன ஆட்சியாளர்கள் முதலில் இராணுவ அடக்குமுறையையே மேற்கொண்டனர் ஆனால் இந்த இராணுவத் தீர்வுத்திட்டங்களில் வெற்றிபெற முடியவில்லை இராணுவத் திட்டங்களில் போராட்டங்கள் மேலும் மேலும் நெருக்கடி கட்டத்தை அடைந்தனவே ஒழிய தீர்வை நோக்கிச் செல்லவில்லை.

நாற்பது ஆண்டுகளாக போராடியதனாலோ அன்றி ஆக்கிரமிப்பிற்கும் அடக்குமுறைக்கும் உட்பட்டதனாலோ

# ஒரு உணர்வு பூர்வமான ஒளியேற்று வைபவம்

மாவீரர் துயிலும் இல்லத்தில் நிகழ்ந்த அந்த நிகழ்ச்சி - மாவீரர் சுடர் ஏற்றும் வைபவம் - அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களை - போராளிகளை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. எங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உணர்வு பூர்வமானகட்டம் இது. இவ்வாறாக இதை வர்ணித்தால் அந்த நிகழ்ச்சியைப் பார்த்த எவரும் மறுத்துக்கூறமாட்டார்கள்.

மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள அந்த மைதானத்தினுள் காலடி எடுத்து வைக்கிறோம். இருபக்கங்களிலும் போராளிகள் அணிவகுத்து நிற்கின்றார்கள். நடுவில் அணிவகுப்பு நிகழ்ச்சிக்கு தயாரான போராளிகளும் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களும் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பில் நிற்கின்றார்கள். அதேவேளை தங்கள் தங்கள் பிள்ளைகளின் கல்லறைகளுக்கு முன்னால் மாவீரரின் பெற்றோர் நிற்கின்றனர். அதுவும் ஒரு அணிவகுப்பாகவே காட்சியளித்தது. ஒலிபெருக்கி அறிவிப்பாளருக்கருகில் தங்கள் பிள்ளைகளின் கல்லறைகளை சரியாக இனம் காட்டுமாறுவேண்டி மாவீரரின் பெற்றோர் நிற்கின்றனர். நேரம் 12 மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது ஒலிபெருக்கியில் ஒரு அறிவிப்பு "எமது மதிப்பிற்குரிய மாவீரரின் பெற்றோரே! இந்த மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டுள்ள பிள்ளைகள் எல்லோரும் உங்கள் பிள்ளைகள் தான் எனவே தற்போது தங்கள், தங்கள்பிள்ளைகளின் கல்லறைகளை சரியாக இனங்காண முடியாத பெற்றோர் இங்கேயுள்ள ஏதாவது ஒரு கல்லறையில் மாவீரர் சுடரை ஏற்றுங்கள். அது உங்கள் பிள்ளைகளின் கல்லறைக்குசுடரேற்றியதற்கு சமனாகும்" என்று கூறியதும் நேரம் நெருங்கி விட்டதையும் அப்போதைய நிலைமையையும் உணர்ந்த அவர்கள் கலைந்து சென்றனர். பெற்றோர் சமூகமளித்திருக்காத மாவீரரின் கல்லறைகளுக்கு முன்னால் போய் நின்றனர். அக்கணத்தில் அந்த மாவீரரையும் தங்கள் பிள்ளைகளாக தத்தெடுத்துக் கொண்டனர்.

போராளிகள், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் ஆகியோரின் அணிவகுப்பு நடந்து கொண்டிருந்தது அப்பிரதேசமே மௌனமானது. இக்காட்சி விடுதலை பெற்ற நாடுகளின் சுதந்திரதின அணி வகுப்பை ஒத்திருந்தது - ஏன் அதைவிட மேலாக அமைந்திருந்தது எனலாம். அங்கு நடைபெறுபவை ஒரு சம்பிரதாயபூர்வமானவை. ஆனால் இது அப்படியல்ல.

ஊழி சங்கைகள் ஊதயும் என்ற கீதத்தின் ஒலி வாத்தியத்தில் கேட்டது. எங்கும் தீப ஒளி. அது இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தது. அந்த ஒளிக்கு வெளிச்சம் மிக அழகாக இருக்கிறது என்று ஒரு கணம் சிந்தனை - உடனே இத்தனைசுடர்கள் - இத்தனை போராளிகளை நாம் இழந்திருக்கிறோம்என்ற கசப்பான உண்மை மனதில் முள்ளாய்த் தைத்தது - 'புதைந்த குழியில் இருந்து நீங்கள் எழுந்து வாருங்கள்' என்று அனைவரும் மனதார வேண்டிக் கொண்டோம்.

அழுது கொண்டிருந்த ஒரு தாய் மயங்கி விழுந்தார். முதலுதவி சிகிச்சைப் பிரிவினர் உடனடியாக அவரைக் கொண்டு சென்றனர். போராளிகள்

**மாவீரர் சுடரொளி ஏற்றும் வைபவம் பற்றிய கண்ணோட்டம்**

சரியாக 12 மணிக்கு மாவீரர் துயிலும் இல்லத்தினுள் அமைக்கப்பட்டிருந்த மணியில் ஒலியெழுப்பப்பட்டது. அக்கணத்தில் சுற்றுப்புறமெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தது சூழவுள்ள ஆலயங்களில் இருந்து ஒலிக்கப்பட்ட மணியோசை மட்டும் தான். போராளிகளும் பொதுமக்களும் சிரந்தாழ்த்தி அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்தனர். 12.02க்கு மணியோசை நின்றதும் விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. வே. மகேந்திரராஜா முதலாவது சுடரை ஏற்றினார். அதன் பின் மாவீரரின் பெற்றோர் மாவீரர் சுடரை ஏற்றினர். போராளிகளும் மாவீரர் சுடர் ஏற்றினர். அவர்களில் பலர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களல்லவா? மாவீரர் சுடர் ஏற்றும்போது எல்லாப் பெற்றோருமே அழுது விட்டனர். சிலர் கல்லறைகளுக்கு மேலே மேலே விழுந்து அழுது கொண்டிருந்தனர். 'என்ர ராசா- அண்ணா -அக்கா அக்கா' என்றகுரல்கள் கேட்டுக் கொண்டேயிருந்தன, அப்போது 'கண் தரப்பில் ஒரு மௌனம் 'மரணித்த வீரனே உன் சீருடைகளை எனக்குத்தா' என்ற வாத்திய ஒலி அவர்களைச் செயலிழக்கச்செய்து விட்டது. சில வினாடிகளின்பின் மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச்சேர்ந்த ஆசன்னாவின் குரல் ஒலித்தது. ஒவ்வொரு வசனமும் நிதானித்து - நிதானித்து - அதைக் கேட்கும் போது மேலும் மேலும் உணர்ச்சிவசப் பட்டனர் மாவீரரின் பெற்றோர்.

சில நிமிட நேரத்தின் பின் மாவீரரின்பெற்றோர் அழைக்கப்பட்டனர். தாங்கள் கொண்டு வந்த மாலைகளை, மலர்களை மாவீரர்களின் கல்லறையில் அஞ்சலிசெலுத்தினர் பெற்றோர் சிலர் மாவீரரின் பெயர் பொறிக்கப்பட்ட கருங்கல்லினாலான நடுகைக்கல்லிலும் மலரஞ்சலி செலுத்தினர் பின்னர் நெஞ்சம் கொஞ்சமாக வெளியேறத் தொடங்கினர்.

மகனை இழந்த தாய் - தந்தையர், சகோதரரை இழந்தவர்கள் வரிசையாக வந்து கொண்டிருந்தனர் இவற்றிற்கு நடுவே தங்கள் தந்தையை இழந்த குழந்தைகளும் வந்து கொண்டிருந்தனர். இவற்றிற்கு நடுவே தன்கணவனை இழந்த-நாட்டிற்குக் கொடுத்தபெண்- மேஜர் டயசின் மனைவியும் வந்து கொண்டிருந்தார் சுதந்திரத்திற்காக நாம் கொடுத்த விலையை எண்ணியவாறு திரும்பிப் பார்த்த போது வரிசையாக எரிந்த தீபங்கள் தெரிந்தன. அன்று எங்கள் சத்தியநாதன் (சங்கர்) எம்மை விட்டுப் பிரிந்தபோது அவனது புகழுடலை தகனம் செய்வதற்கு பத்துக்கும் குறைவானவர்களே சென்றிருந்தனர். இன்று எங்கள் சொந்தங்கள் பெருகி விட்டன. அன்று அந்நிய மண்ணில் இரகசியமாகவே அதைச் செய்ய வேண்டியிருந்தது. இன்று எம் சொந்த மண்ணில் தலை நிமிர்ந்தபடி நாம் ...

"நானும் மாவீரர் குடும்பம் தான்" என்று குறிப்பிட்டு விட்டு எம்முடன் உரையாடத் தொடங்கினார் ஒரு போராளி அவரது சகோதரன் முல்லைத்தீவில் வீரமரணமெய்தினார். "போராளிகளான எங்களாலேயே தாங்க முடியாமலிருக்கு. பெற்றோரால எப்பிடி"...... என்று கூறி நிறுத்தினார். அவரது நினைவுகளில் அவரோடு கூடப்பழகிய நண்பர்கள் அனைவரும் வந்திருக்க வேண்டும் இந்திய இராணுவத்தின் காலடிகள் எம் மண்ணை அபகரித்துக் கொண்டிருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் எஞ்சிய போராளிகளில் அவரும் ஒருவர் "நாளைக்கு ஆர் ஆர் உயிரோட இருக்கிறமோ தெரியாது. உயிரோட இருக்கிறவை இதைச் செய்யுங்கோ என்று சொல்லிப்போட்டுத்தான் வெளிப்பல வெளிக்கிடுவம்" என்று தனது அந்த நாளைய அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார். அவருக்கு அருகிலே ஒவ்வொரு நிமிடமும் நண்பர்கள் உதிர்ந்து கொண்டிருந்த அந்த நண்பர்களை நினைவுபடுத்தியிருக்கும்.

வாகனங்களில் பெற்றோர் ஏறிக்கொண்டிருந்தனர். ஒலிபெருக்கியில் "புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம் என்றே நீ கூறு - வேங்கைகள் ஆனவர் நாங்கள் ..........." என்ற வரிகள் வாத்தியக் கருவிகளோடாக ஒலித்துக்கொண்டிருந்தன - அப்போது போராளிகள் தம் மனதில் எடுத்துக் கொண்டிருந்த சத்தியப் பிரமாணத்திற்கு இசைவாக.

## மருந்து விநியோகம்

## பாதுகாப்பு ஏற்பாடுகள்

அதேவேளை சுருக்கமாகவும் வெளியிட்டுள்ளார். இந்த தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை சிறிலங்கா சிங்கள அரசு எப்பொழுது அங்கீகரிக்கின்றதோ அப்பொழுதே ஒரு நிரந்தர சமாதானமும், தீர்வும் ஏற்பட முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாம் போருக்கும் தயார், சமாதானத்திற்கும் தயார் சமாதானத்திற்கான வழியைத் திறப்பதா அல்லது யுத்தத்தின் பாதையில் செல்வதா என்பதை எதிரிதான் தீர்மானிக்க வேண்டும். நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்துவிட்டிருக்கின்றோம். சமாதான வழிமுறையில் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தவும் தயார் எனவும் தெரிவித்துள்ளார்.

இன்று இலங்கையில் மட்டுமல்ல; உலகின் எல்லாப் பாகங்களிலும் அடக்கப்பட்ட தேசிய இனங்களின் போராட்டங்களே முதன்மையானவையாக நெருக்கடி மிக்கவையாக உள்ளன. இந்த தேசிய இனங்களின் போராட்டங்களில் சில வெற்றி பெற்றுள்ளன. சில வெற்றி பெறும் தறுவாயில் உள்ளன. சில போராட்டங்களுக்கு சமாதான முயற்சிகளின் மூலம் தீர்வு காண்பதற்கு சர்வதேச சமூகம் முனைந்து கொண்டிருக்கின்றது. இப்பிரச்சினைகளில் அநேகமானவை ஆசியாவிலும், ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் பரந்து கிடக்கின்றன.

இப் போராட்டங்களில் வெற்றி கண்டவையாயினும் - லித்வேனியா, லட்வியா, எஸ்தோனியா, எரித்திரியா - சரி, தற்பொழுது வெற்றிபெறும் நிலையில் உள்ள அல்லது பிரிந்து செல்லும் உரிமையுடையவையான சோவியத் குடியரசுகளாயினும் சரி, சர்வதேச சமூகம் இன்று சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ள இஸ்ரேல் அரபு நெருக்கடி, யூக்கோஸ்லாவிய செர்பியர் - குரோசியர் நெருக்கடி ஆயினும் சரி, இன்று இப் பிரச்சினையில் தொடர்புடைய சகலரினதும் தேசிய இன அந்தஸ்தை அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு அவர்களின் சுயநிர்ணய உரிமைகளையும் அங்கீகரித்தே பிரச்சினைகளுக்குரிய தீர்வு திட்டங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றின் அடிப்படையிலேயே பேசவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

மேற்கூறிய இந்த நெருக்கடிகள் யாவற்றிலும் பெரும்பான்மை இன ஆட்சியாளர்கள் முதலில் இராணுவ அடக்குமுறையையே மேற்கொண்டனர். ஆனால் இந்த இராணுவத் தீர்வுத்திட்டங்களில் வெற்றிபெற முடியவில்லை. இராணுவத் திட்டங்களில் போராட்டங்கள் மேலும் மேலும் நெருக்கடி கட்டத்தை அடைந்தனவே ஒழிய தீர்வை நோக்கிச் செல்லவில்லை.

நாற்பது ஆண்டுகளாக போராடியதனாலோ அன்றி ஆக்கிரமிப்பிற்கும் அடக்குமுறைக்கும் உட்பட்டதனாலோ பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் ஓய்ந்து விடவில்லை. நாற்பது வருடங்களின் பின்னும் தமது விடுதலையை வென்றெடுக்க பாலஸ்தீனியர்கள் தொடங்கிய 'சிந்திபாதா' போராட்டம் நான்கு வருடங்களாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இன்று பாலஸ்தீனியர்களின் உரிமையை அங்கீகரிக்க தயக்கம் காட்டிய அமெரிக்கா இன்று தீர்வைப்பற்றி வற்புறுத்துகின்றது. அமெரிக்காவால் போஷிக்கப்பட்டு செல்லப் பிள்ளையாக வளர்க்கப்பட்ட இஸ்ரேல் இன்று இப் பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வாஷிங்டன்போக தயங்குகின்றது. இதற்காகப் போலிக் காரணங்களை தேடுவதில் இஸ்ரேலியப் பிரதமர் தனது காலத்தைச் செலவிடுகின்றார். அதாவது அமெரிக்கா சென்றால் பாலஸ்தீனர்களின் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும், ஆக்கிரமித்த பகுதிகளை விட்டுக்கொடுக்க வேண்டிய நிலைவரும் என இஸ்ரேல் அஞ்சுகின்றது.

சுருக்கமாகக் கூறின் உலகில் இன்று தேசிய இனங்களின் பிரச்சினைக்கு அவர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்பதே தீர்வாக வைக்கப்படுகின்றது. அதன் வழியிலேயே தீர்வுகள் பற்றியும் சிந்திக்கவும்படுகின்றது.

இதனை சிங்கள பேரினவாத சக்திகளும் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் உண்டு. அதாவது இராணுவ தீர்வின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். இதனை மனதிற் கொண்டு தமிழர் தேசிய இனப்பிரச்சினையை அணுக தமது மனதை விசாலமாக்கிக்கொள்ள வேண்டும்.

இதைவிடுத்து இராணுவ கண்ணோட்டத்திலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வை சிங்கள அரசாங்கம் சிந்திக்குமானால் அதற்கு தமிழ் மக்களோ அன்றி விடுதலைப் புலிகளோ பணிந்து போய்விடப்போவதில்லை. அதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிடவும் முடியாது. இந்நிலையில் சமாதானமா? போரா? என்பதை தீர்மானிக்க வேண்டியவர்கள் சிங்கள அரசதரப்பினரே.

---

...அணிவகுப்பு நிமிர்ந்து நிற்க தயாரான போராளிகளும் விடுதலைப் புலிகளின் மகளிர் இயக்க உறுப்பினர்களும் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பில் நிற்கின்றார்கள். அதேவேளை தங்கள் தங்கள் பிள்ளைகளின் கல்லறைகளுக்கு முன்னால் மாவீரரின் பெற்றோர் நிற்கின்றனர். அதுவும் ஒரு அணிவகுப்பாகவே காட்சியளித்தது. ஒலிபெருக்கி அறிவிப்பாளருக்கருகில் தங்கள் பிள்ளைகளின் கல்லறைகளை சரியாக இனம் காணமுடியாதவர்களுக்கு மாறுவேண்டிய மாவீரரின் பெற்றோர் நிற்கின்றனர். நேரம் 12 மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது ஒலிபெருக்கியில் ஒரு அறிவிப்பு "எமது மதிப்பிற்குரிய மாவீரரின் பெற்றோரே! இந்த மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டுள்ள பிள்ளைகள் எல்லோரும் உங்கள் பிள்ளைகள் தான் எனவே தற்போது தங்கள், தங்கள் பிள்ளைகளின் கல்லறைகளை சரியாக இனங்காண முடியாத பெற்றோர் இங்கேயுள்ள ஏதாவது ஒரு கல்லறையில் மாவீரர் சுடரை ஏற்றுங்கள். அது உங்கள் பிள்ளைகளின் கல்லறைக்குசுடரேற்றியதற்கு சமனாகும்" என்று கூறியதும் நேரம் நெருங்கி விட்டதையும் அப்போதைய நிலைமையையும் உணர்த்த அவர்கள்

## மாவீரர் சுடரொளி ஏற்றும் வைபவம் பற்றிய கண்ணோட்டம்

சரியாக 12 மணிக்கு மாவீரர் துயிலும் இல்லத்திலுள்ள அமைக்கப்பட்டிருந்த மணியில் ஒலியெழுப்பப்பட்டது. அக்கணத்தில் சுற்றுப்புறமெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தது சூழவுள்ள ஆலயங்களில் இருந்து ஒலிக்கப்பட்ட மணியோசை மட்டும் தான். போராளிகளும் பொதுமக்களும் சிரந்தாழ்த்தி அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்தனர். 12.02க்கு மணியோசை நின்றதும் விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா முதலாவது சுடரை ஏற்றினார். அதன் பின் மாவீரரின் பெற்றோர் மாவீரர் சுடரை ஏற்றினர். போராளிகளும் மாவீரர் சுடர் ஏற்றினர். அவர்களிலும் பலர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களல்லவா? மாவீரர் சுடர் ஏற்றும்போது எல்லாப் பெற்றோரும் அழுது விட்டனர். சிலர் கல்லறைகளுக்கு மேலேயே விழுந்து அழுது கொண்டிருந்தனர். 'என்ர ராசா - அண்ணா - அக்கா அக்கா' என்றகுரல்கள் கேட்டுக் கொண்டேயிருந்தன. அப்போது 'கண் மூடிய ஓர் மௌனம் 'மரணித்த வீரனே உன் சீருடைகளை எனக்குத்தா' என்ற வாத்திய ஒலி அவர்களைச் செயலிழக்கச்செய்து விட்டது. சில வினாடிகளின்பின் மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவைச்சேர்ந்த அரசண்ணாவின் குரல் ஒலித்தது. ஒவ்வொரு வசனமும் நிதானித்து - நிதானித்து - அதைக் கேட்கும் போது மேலும் மேலும் உணர்ச்சிவசப்பட்டனர் மாவீரரின் பெற்றோர்.

சில நிமிட நேரத்தின் பின் மாவீரரின்பெற்றோர் அழைக்கப்பட்டனர். தாங்கள் கொண்டு வந்த மாலைகளை, மலர்களை மாவீரர்களின் கல்லறைகளில் அஞ்சலி செலுத்தினர் பெற்றோர் சிலர் மாவீரரின் பெயர் பொறிக்கப்பட்ட கருங்கல்லிலான நடுகைக்கல்லிலும் மலரஞ்சலி செலுத்தினர் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறத் தொடங்கினர்.

மகனை இழந்த தாய் - தந்தையர், சகோதரரை இழந்தவர்கள் வரிசையாக வந்து கொண்டிருந்தனர் இவற்றிற்கு ... ரோடு கூடப் பழகிய நண்பர்கள் அனைவரும் வந்திருக்க வேண்டும் இந்திய இராணுவத்தின் காலடிகள் எம் மண்ணை அபகரித்துக்கொண்டிருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் எஞ்சிய போராளிகளில் அவரும் ஒருவர் "நாளைக்கு ஆர் ஆர் உயிரோட இருக்கிறமோ தெரியாது. உயிரோட இருக்கிறவை இதைச் செய்யுங்கோ என்று சொல்லிப்போட்டுத்தான் வெளியால வெளிக்கிடுவம்" என்று தனது அந்த நாளைய அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டவர். அவருக்கு அருகிலே ஒவ்வொரு நிமிடமும் நடந்தும் உதிர்ந்துகொண்டிருந்த தனது நண்பர்களை நினைவூட்டியிருக்கும்.

வாகனங்களில் பெற்றோர் ஏறிக்கொண்டிருந்தனர். ஒலிபெருக்கியில் "புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம் என்றே நீ கூறு - வேங்கைகள் ஆனவர் நாங்கள் ..........." என்ற வரிகள் வாத்தியக் கருவிகளூடாக ஒலித்துக்கொண்டிருந்தன - அப்போது போராளிகள் தம் மனதில் எடுத்துக் கொண்டிருந்த சத்தியப் பிரமாணத்திற்கு இசைவாக.

---

## மருந்து விநியோகம் அ.அதிபர் தலைமையில்குழு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு வேண்டிய மருந்துப் பொருட்களின் விநியோகம், விலை நிர்ணயம் என்பனவற்றைத் தீர்மானிப்பதற்கு யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ். அரச அதிபர், சுகாதார மருந்தக சங்கப் பிரதிநிதி, வட இலங்கை மருந்தக நிலையத்தின் பிரதிநிதி ஆகியோர் அங்கம் வகிக்கும் இக் குழு இம் மாவட்டத்திற்குத் தேவையானமருந்துப்பொருட்களைத் தருவித்தல், விநியோகித்தல், விலைநிர்ணயம் செய்தல்போன்ற கடமைகளை மேற்கொள்வதற்கும் பொறுப்பாகச் செயற்படும்.

கடந்த திங்கட் கிழமைமாலை யாழ். செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் இக் குழு அமைக்கப்பட்டது. இலங்கைக்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மருத்துவப் பிரதிநிதியும் கலந்துகொண்டார். இக்கூட்டத்தில் மருந்துப் பொருள் விநியோகத்தில் நிலவும்குறைபாடுகள் எடுத்துரைக்கப்பட்டன.

(ஈ)

## மணலாற்று பிரதேசத்தில் விமானக் குண்டு வீச்சு

(மணலாறு)

மணலாற்றில் நேற்று முன்தினம் காலை எட்டுமணியளவில் அவ்ரோ விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தியுள்ளன. நாயாறு, அளம்பில், செம்மலை ஆகிய பகுதிகளிலேயே இவ் விமானக் குண்டு வீச்சுக்கள் நடத்தப்பட்டன. இத் தாக்குதல்களால் தமிழ் மக்களது வீடுகள் பல சேதமடைந்தன. நேற்றுப் பிற்பகலிலும், நேற்று முன்தினமிரவிலும் கூட சிறிலங்கா விமானங்களின் குண்டு வீச்சுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டு உள்ளன.

## பாதுகாப்பு ஏற்பாடுகள் தமிழகத்தில் தீவிரம்

(சென்னை)

சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்துக்குள் பார்வையாளர்கள் செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை ஒன்பது மணி முதல் இந்தத் தடை அமுலுக்கு வந்துள்ளதாக விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுவான பாதுகாப்புக் கருதி இந்தத் தடை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதே வேளை இந்திய அரசின் புதிய தொழிற் கொள்கையை எதிர்த்து டிசம்பர் 17 ஆம் திகதி பொது வேலை நிறுத்தம் செய்யப்போவதாக இடதுசாரிகள் அறிவித்திருந்ததைத் தொடர்ந்து இந்தியா முழுவதுமே பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக டெல்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கணித விஞ்ஞான பாடநெறி ஜனவரியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா ஒன்றிணைக்கப்பட்ட பல்கலைக் கழகக் கல்லூரியில் வரும் ஜனவரி மாதம் கணித விஞ்ஞான பாடநெறி வகுப்புக்கள் முதலில் ஆரம்பமாகும்.

ஒரு வருட கணித விஞ்ஞான சான்றிதழ் கற்கை நெறிக்கு நூறு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காலக்கிரமத்தில் மனையியல், இதழியல், உயிரியல், கணக்கியலும் நிதியியலும், விவசாயம், ஆங்கிலம், அளவு கூட்டுத் தொழில் நுட்பவியல், மீன்பிடித்தொழில், சிறுவர்த் தகம் ஆகிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன இத் துறை வெவ்வேறு பல்கலைக் கழகக்கல்லூரிகளிலும் ஆரம்பிக்கப்படலாம் என இக் கல்லூரியின் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி எஸ். மோகனதாஸ் தெரிவித்தார்.

